TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102200

1. District : மாவட்டம் Chennai PS: காவல்நிலையம் Chennai City-I V&AC Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 1/2024 Date: நாள் 14.5.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act. Sections பிரிவுகள்: u/s 7 of Prevention of Corruption Act 1988 Amended 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 3.5.24 Date to : நாள் வரை 13.5.2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.5.2024 Time : நேரம் 09.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : 14 Kms North East
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Mr. Pon Thangavelu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Mr. Ponnaiah Servai
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50 yrs (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Social Activist (g) Address : முகவரி No. 2/214A, Rajan Nagar 2nd Street, E.C.R. Injambakkam, Chennai-15

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. Saroja.
   Tahsildar, O/o the Regional Deputy Commissioner (South) Greater Chennai Corporation Adayar, Ch-1.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No-Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet is Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank Inspr ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Poni Thangavelu 14/05/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
V. Selvi

15. Date & Time of despatch to the court: 14.5.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Inspector of Police.
Rank: நிலை Chennai City - 1 No. எண்
V & AC, Alandur, Chennai

V&AC, CC-1 Detachment, Cr.No. 1/AC/2024/CC-I -FIR தொடர்ச்சி:

14.05.2024 -ந்தேதி காலை 09.00 மணியளவில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு-1-ன் காவல் ஆய்வாளர் V.செல்வி ஆகிய நான் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சென்னை-600 115, E.C.R ஈஞ்சம்பாக்கம், எண் 2/214A, ராஜன் நகர் 2-வது தெருவில் வசிக்கும் பொன் தங்கவேலு, வயது 50, த/பெ.பொன்னையா சேர்வை என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை மேற்கொண்டு இன்று 14.05.2024 -தேதி காலை 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- 14.05.2024 அனுப்புநர்:பொன் தங்கவேலு, வயது 50, த/பெ.பொன்னையா சேர்வை, எண் 2/214A, ராஜன் நகர் 2-வது தெரு, E.C.R ஈஞ்சம்பாக்கம், சென்னை – 115. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை- 600 016. அம்மா, நான் மேற்படி விலாசத்தில் சுமார் 25 வருடங்களாக வசித்து வருகிறேன். ஈஞ்சம்பாக்கம் வார்டு எண் 194 -ல் உள்ள ராஜன் நகர் & செல்வா நகர் பொது நல சங்கத்தில் செயலாளராக உள்ளேன். சமூக ஆர்வலராக இருந்து வருகிறேன். கொட்டிவாக்கத்தில் உள்ள கற்பகம்பாள் நகர், கல்யாணி நகர், ராஜா தோட்டம் நல சங்கத்தில் செயலாளராகவும் O.M.R & E.C.R நீர் நிலைகள் பாதுகாப்பு இயக்கத்தில் நிறுவனராகவும், யாதும் ஊரே இயக்கத்தில் செயலாளராகவும், சட்ட பஞ்சாயத்து இயக்கத்தில் உறுப்பினராகவும், அறப்போர் இயக்கத்தில் உறுப்பினராகவும் இருந்து வருகிறேன். நான் சமூக ஆர்வலராகவும் இருந்து கொண்டு சமூக பணி செய்து வருகிறேன். ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள ராஜன் நகர் செல்வா நகர் செல்லும் பாதையில் ஈஞ்சம்பாக்கம் வெட்டுவாங்கேணி இணைப்பு சாலை உள்ளது. இந்த இணைப்பு சாலை 40 அடி அகலம் கொண்டது. அந்த இணைப்பு சாலையில் 13 வீடு. கட்டி ஆக்கிரமிப்பு செய்து உள்ளார்கள் அந்த இடத்தில் சாலை 12 அடியாக குறுகிவிட்டது. ஆகையால் ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி மண்டலம் 15 -ல் உள்ள மண்டல அலுவலரிடம் புகார் கொடுத்தோம். புகார் மீது எந்த நடவடிக்கையும் இல்லை ஆகையால் நான் சென்னை உயர்நீதிமன்றத்தை நாடி (W.P.No.18717 of 2014) வழக்கு தொடர்ந்த போது, அந்த ரோட்டில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற சொல்லி உயர்நீதிமன்றம் உத்தரவு போட்டது. பிறகு அந்த உத்தரவு மீது Appeal போனார்கள் Appeal -லும் ரோடு யாருக்கும் பட்டா போட்டு கொடுக்க முடியாது ஆக்கிரமிப்பை கண்டிப்பாக அகற்ற வேண்டும் என்று உயர்நீதி மன்றம் கூறியது இது சம்மந்தமாக மாநகராட்சி சார்பில் ஒரு Affidavit தாக்கல் செய்யப்பட்டது. அந்த W.P.No.304040 of 2015 இந்த இடம் எங்களுக்கு தேவை ரோடு குடிநீர், கழிவு நீர் அமைக்கும் திட்டம்

வரும் போது இந்த ஆக்கிரமிப்பை அகற்றுகிறோம் என்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. உடனே 13 ஆக்கிரமிப்பாளர்களும் தனிதனியே Affidavit தாக்கல் செய்து, எப்ப கேட்டாலும் எந்த மறுப்பும் செய்யாமல் அந்த இடத்தை விட்டு காலி செய்கிறோம் என்று நீதி மன்றத்தில் எழுதி கொடுத்தார்கள். இவர்கள் சொன்னபடி ஆக்கிரமிப்பு தற்போது வரை அகற்றவில்லை. அதனால் W.P.No.5609 of 2018 -ன்படி நீதிமன்றத்தில் முறையீடு செய்தோம். அதனை எதிர்த்து திரு. பார்த்த சாரதி என்பவர் Appeal போனார். அவருடைய மேல் Appeal மனுவினை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவு போட்டது. (W.P.No.5609 of 2018 and 26900 of 2023) தற்போது அங்கு பாதாள சாக்கடை திட்டம் மற்றும் ரோடு ஆகிய திட்டங்கள் வந்துவிட்டது. அதனால் ஏன் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்று மண்டல அலுவலரிடம் முறையிட்டோம். எங்களுக்கு சரியான பதில் கிடைக்கவில்லை 03.05.2024 -ம் தேதியான வெள்ளிகிழமையன்று வட்டார துணை ஆணையர் (South) அவர்களை போய் பார்த்தோம். உடனே வட்டார துணை ஆணையர் அவர்கள் மூன்று நாட்களில் நான் காலி செய்து விடுகிறேன் என கூறி ஒரு பெண் அதிகாரியை கூப்பிட்டு இந்த புகார் என்ன என்று பாருங்கள் இவர்கள் ரொம்ப நாளாக வருகிறார்கள் என்று கூறினார் உடனே அந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் கொடுங்க என்று உத்தரவு போட்டார் உடனே அந்த அம்மா என் கூட வாருங்கள் என்று எங்களை கூட்டி போனார். அங்கு போன பிறகு தான் தெரியும் அந்த அம்மா பெயர் சரோஜா என்றும் அவர் மாநகராட்சியில் தாசில்தாராக பணிபுரிகிறார் என்று சரோஜா அம்மா அவர்கள் நீங்கள் கவலைபடாமல் போங்கள் நாங்கள் மூன்றே நாட்களில் ஆக்கிரமிப்பை அகற்றி விடுகிறோம் என்று சொன்னார்கள் நன்றி தெரிவித்து விட்டு வந்தோம். மறு நாள் சனிகிழமை சரோஜா அம்மாவிடம் இருந்து எனக்கு அழைப்பு வந்தது நீங்கள் என் வீட்டிற்கு ஞாயிற்றுகிழமை வாருங்கள் நான் உங்களோடு பேச வேண்டும் என்று சொன்னார்கள் நான் ஞாயிற்றுகிழமை (05.05.2024) Saint Thomas Mount -ல் உள்ள சரோஜா அம்மா வீட்டிற்கு சென்றேன். அப்போது அவர்கள் என்னிடம் நான் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி தருகிறேன் எனக்கு ஒரு கோடி ரூபாய் தாருங்கள் என்று கேட்டார். அதற்கு நான் அம்மா நான் சமூக ஆர்வலர் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. மேலும் இது என் இடம் இல்லை. உங்களுடைய இடம் இதை நீங்கள் தான் மீட்க வேண்டும். உங்க இடத்திற்கு நான் உயர் நீதிமன்றம் சென்று உத்தரவு வாங்கி வந்தும் ஆக்கிரமிப்பை அகற்ற பணம் கேட்கிறீர்கள் என்று கேட்டேன். உடனே சரோஜா அம்மா உங்களிடம் பணம் இல்லை என்றால் உங்க நல சங்க நிர்வாகிகளிடம் வாங்கி தாருங்கள் என்று கேட்டார். அந்த ஆக்கிரமிப்பை அகற்றினால் ரோடு

அகலமாகிவிடும் அங்கு உள்ள இடத்தின் மதிப்பு கூடி விடும் ஆகையால் ஆக்கிரமிப்பு பின்னால் உள்ள இடத்துகாரர்களிடம் வாங்கி தாருங்கள் என்று கேட்டார். நான் எப்படி ஒரு கோடி வாங்க முடியும் என்று கேட்டேன். பிறகு கொஞ்சம் நேரம் கழித்து நீங்கள்தான் பேசி வாங்கி தாருங்கள் இல்லை என்றால் ஆக்கிரமிப்பாளர்களிடம் போய் விடுவேன் என்று கூறினார். பிறகு நான் அவ்வளவு பணம் திரட்ட முடியாது கொஞ்சம் குறைக்க முடியுமா என்று கேட்டேன். இரண்டு நாள் கழித்து சொல்லுகிறேன் என்று சொன்னார். மறுபடியும் 07.05.2024 -ம் தேதியன்று திங்கள் கிழமை நான் சரோஜா அம்மா அவர்களை அவரது அலுவலகத்திற்கு சென்று பார்த்த போது, அப்போது 13 வீடு ஆக்கிரமிப்பாளர்கள் சரோஜா அம்மாவிடம் பேசி கொண்டு இருந்தார்கள் அவர்கள் போன பிறகு நான் போனேன். சரோஜா அம்மா அவர்கள் சொன்னார்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்னை பார்த்து விட்டு போகிறார்கள் நீங்கள் என்ன நான் கேட்ட பணம் 1 கோடி கிடைக்குமா என்று கேட்டார்கள் அம்மா கொஞ்சம் கருணை காட்டுங்கள் என்று கெஞ்சினேன். சரி ஒரு 20 லட்சம் கொடுங்கள் என கேட்டார்கள் இதற்கு மேல் குறைக்க முடியாது இந்த பணம் எனக்கு மட்டும் இல்லை மேல் மட்டத்தில் இருந்து கீழ்மட்டம் வரைக்கும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் எங்கள் சங்க உறுப்பினர்களிடம் கேட்டு விட்டு சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு 09.05.2024 -ம் தேதியன்று வியாழக்கிழமை எங்க சங்க நிர்வாகிகள் சுமார் 100 பேர் வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களை பார்த்தோம். ஐயா நீங்கள் மூன்றே நாட்களில் ஆக்கிரமிப்பை அகற்றுகிறோம் என்று சொன்னீர்கள் நீங்கள் சொல்லி 10 நாட்கள் ஆகிவிட்டது. என்ன நிலையில் இருக்கிறது என்று கேட்க வந்தோம் என்று கேட்டோம். உடனே சரோஜா அம்மா வந்தார்கள். வேலை நடந்துகிட்டு இருக்கு கூடிய விரைவில் ஆக்கிரமிப்பை அகற்றுவோம் என்று சொன்னார்கள். பிறகு சரோஜா அம்மா என்னை அவர்களது இருக்கைக்கு அழைத்து சென்று அங்கு என்னிடம் அப்ப நான் கேட்ட பணம் எங்கே பணம் கொடுத்தால் உடனே ஆக்கிரமிப்பை அகற்றுகிறேன். நீங்கள் எங்க போனாலும் இங்கு தான் பேப்பர் வரும் நான் மனசு வைக்க வேண்டும் என்று சொன்னார்கள் அதற்கு என்னால் ரெடி பண்ண முடியவில்லை என்றேன் உடனே ஐந்து லட்சம் ரெடி பண்ணுங்கள் நான் நோட்டீஸ் கொடுக்கிறேன் என்று கேட்டார்கள். நான் எங்கள் நிர்வாகிகளிடம் பேசி விட்டு சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 13.05.2024 -ம் தேதியன்று என்னை வட்டார ஆணையர் அலுவலகத்திற்கு வர சொன்னார்கள், நானும் சென்றேன். அப்போது நான் கேட்டது என்ன ஆச்சு என்று சரோஜா அம்மா கேட்டார்கள் ரெடி பண்ணி கொண்டு இருக்கிறேன். சரி நாளைக்கு

மூன்று லட்சம் முதலில் கொண்டு வாருங்கள் என கேட்டார். நான் நாளைக்கு மூன்று லட்சம் தருகிறேன் நீங்கள் நோட்டீஸ் கொடுத்த பிறகு இரண்டு லட்சம் தருகிறேன், பிறகு மீதி பணம் தருகிறேன் என்று சொன்னேன். ஐயா, எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை ஆகையால் இன்று (14.05.2024) என்னிடம் லஞ்சம் கேட்டு தொந்தரவு தரும் திருமதி.சரோஜா மீது நடவடிக்கை எடுத்து எங்களுக்கு நீதிமன்ற உத்தரவுபடி ஆக்கிரமிப்பை அகற்றி தரும்படி மிக தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு XXXXXX ஒப்பம் (பொன் தங்கவேலு) I received the above complaint today on 14.05.2024 at 09.00hrs and after conducting discreet enquiry, I register a case in Vigilance and Anti –Corruption, Chennai City – I Detachment in Cr.No.01/AC/2024/CC –I u/s. 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 today on 14.05.2024 at 09.30 taken up for investigation. I herewith submit the original F.I.R and the complaint to the Hon'ble Special Court for the Case under the Prevention of Corruption Act, Chennai. I also forward the copy of F.I.R to the officer's concerned.

14/5/2024.

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Chennai - City - I Dett,
Alandur, Chennai - 600 016.